[1972 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கரும்பு பற்றி ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மத்திய சர்க்காரே 73-70 கொடுக்க வேண்டுமென்று உத்தரவு போட்டுவிட்டு 85 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லியனுப்புகிருர்கள். இப்படி உத்தரவு போடுவது ஒரு விலை, வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று சொல்லுவது ஒரு விலை என்ற நிலைமை இருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் என்ன விலையை நிர்ணயிக்கிருர்களோ அதை வாங்கிக்கொடுப்பதற்கும், கூடுமானல் அதற்குமேலும் வாங்கிக்கொடுக்கவும் முயற்சிக்கத் தயாராக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தங்கலில் சலவைத் துறை

* 203. **வினா—திரு. கா. காளிமுத்து** : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

சாத்தூர் வட்டம், திருத்தங்கலில் சலவைத் துறை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : திருத்தங்கலில் சலவைத் துறை கட்ட ஊராக வளர்ச்சி இயக்குநரின் செயற்குறிப்பை ஆய்ந்து ரூ. 10,600 மான்யமாகவும், ரூ. 16,600 கடனகவும் வழங்கியுள்ளது.

17–5–1972 அன்று சலவைத் துறை கட்ட ஒப்ப அறிவிப்பு செய்யப்பட்டும் ஒப்பந்தக்காரர் எவரும் முன்வராததால் மறு ஒப்ப அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதற்கு கடைசி நாள் 24-7-72.

Kallar Reclamation Scheme.

*204. Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have constituted any Special Department for Kallar Reclamation in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU N. DENNIS: May I know from the Hon. Minister whether any survey of the living conditions of the community has been conducted?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தனித் துறை என்று கேட்டதால் இல்லை என்று சொன்னேன். ஆனால் இதற்கு மாவட்ட துணை ஆட்சித் தலைவர் போடப்பட்டு அவர்களுக்கு எல்லாக் காரியங்களும் நடைபெற்று வருகின்றன.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, திருச்சி, தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் கள்ளர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அதிலும் மதுரை மாவட்டத்தில் பெருமளவில் கள்ளர்களுக்காக இந்த மேம்பாட்டுத் திட்டம் இருக்கிறது. அதை எல்லா கள்ளர் சமுதாயத்திற்கும் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அரசுக்கு அப்படிப்பட்ட நோக்கம் எதுவும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெடால் கிராமத்தில் கோவில் திருப்பணி

*** 205 வினு—திரு. வீ. இராசகோபால்** : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், வெடால் கிராமத்தில் உள்ள ஜெயங்கொண்டான் காலத்திய கோவில் இந்து அறநிலையத்தின் கீழ் உள்ளதா ?

(இ) அக்கோவிலை புதுப்பிக்கக் கோரி அவ்வூர் மக்களிடமிருந்து மனு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த வெடால் கிராமத்தில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த குகைச் சிற்பங்கள் இருக்கின்றன. அதையும் அரசாங்கம் கண்காணித்து சரி செய்து சீர் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.